

கொரிய மொழித் தேர்வுப் பரீட்சைக்காக பதிவு செய்தல் - 2026

(உற்பத்தி மற்றும் மீன்பிடித் துறைகள்)

<u>விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்</u>

தேர்வு அனுமதிப்பத்திரங்களை வழங்குவது நிகழ்நிலை வழியாக (Online) மட்டுமே 2026.10.26 ஆந் திகதி முதல் 2026.10.30 திகதி வரை மட்டுமே மேற்கொள்ளப்படும்.

தேர்வு விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகுதிகள்:-

1. வயது 18-க்கும் 39-க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (1986.10.27 முதல் 2008.10.26 வரை பிறந்தவராக இருத்தல் வேண்டும்)

2. நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டப்பணம் செலுத்துதல், சிறைத்தண்டனை அல்லது கடுமையான தண்டனை பெறாதவராக இருத்தல் வேண்டும்.

3. கொரிய குடியரசிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவராக அல்லது வெளியேற்றப்பட்டவராக இருத்தல் கூடாது.

4. நாட்டிலிருந்து வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

5. நிறக்குருடு (Colour blindness) அல்லது நிறங்களைப் பிரித்தறியும் குறைபாடு இல்லாதவராக இருத்தல் வேண்டும்.

6. முதுகுத் தண்டு வடக் கோளாறுகள் உள்ளவராக அல்லது விரல்கள் குறைந்தவராக அல்லது அகற்றப்பட்டவராக இருத்தல் கூடாது. (இத்தகைய குறைபாடுகள் உள்ள நபர்களுக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும், எனினும் அவர்கள் தேர்வில் சித்தியடைய மாட்டார்கள்).

7. **E-9 விசா வகை மற்றும் E-10 விசா வகை ஆகிய இரண்டு விசா வகைகளின் கீழும் வேலை செய்த காலம் உட்பட, ஐந்து (05) ஆண்டுகளுக்கு மேலான சேவைக்காலத்தைக் தென் கொரியாவில் பணிபுரிந்தவராக இருத்தல் கூடாது.**

தேர்வு விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையானவை:-

தேர்வு விண்ணப்பங்களை வழங்கும் நடவடிக்கை நிகழ்நிலை வழியாக (Online) மேற்கொள்ளப்படுவதால், பதிவு செய்வதற்கு முன்னர் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்து உங்களது வசம் வைத்திருக்க நடவடிக்கை எடுங்கள்.

1. முன்னால் குறைந்தபட்சம் 03 மாதங்களுக்குச் செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் (Passport) புகைப்படம் உள்ள பக்கத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட JPG வடிவிலான புகைப்படம் (1MB) இருக்க வேண்டும். (எனினும் தேர்வில் தோற்றும் போது உங்களிடம் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு இருக்க வேண்டும்).
2. 03 மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட 3.5 cm x 4.5 cm அளவுடைய வெள்ளை நிறப் பின்னணியைக் கொண்ட தெளிவான ஸ்கேன் செய்யப்பட்ட வர்ணப் புகைப்படம் JPG வடிவில் இருக்க வேண்டும். (வெள்ளை நிற ஆடைகளை அணிந்து புகைப்படம் எடுப்பதைத் தவிர்ந்துக் கொள்ள வேண்டும்)

   - Photo width : 100 - 300 pixels
   - File type : Only JPG (JPG மட்டும்)
   - File Capacity : No more than 15 KB
   - உங்கள் முகம் தெளிவாகத் தெரிவது கட்டாயமாகும், மேலும் புகைப்படத்திற்காக விளிம்புகள் (Borders) மற்றும் எழுத்துகள் போன்றவற்றைச் சேர்த்தல் கூடாது.
   - உடலை நேராக வைத்துப் புகைப்படம் எடுக்கப்பட வேண்டும்.
   - மூக்குக் கண்ணாடிகள் அணியாமல் புகைப்படம் எடுக்கப்பட வேண்டும்.



நிறக் குருட்டுத்தன்மை மற்றும் நிறப் பார்வைக் குறைபாடு உள்ள விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். பரீட்சைக்கான பதிவுகளை மேற்கொள்ளும் முன்னர், உங்களுக்கு நிறக் குருட்டுத்தன்மை அல்லது நிறப் பார்வைக் குறைபாடு இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது உங்களது பொறுப்பாகும். (நிறக் குருட்டுத்தன்மையைச் பரிசோதித்துப் பெற்ற அறிக்கையைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது பதிவேற்றம் (Upload) செய்யத் தேவையில்லை.)

நீங்கள் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர், கொரிய வேலைவாய்ப்பு இணையத்தளத்தில் பதிவு செய்வதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனையின்போது நிறக்குருட்டுத்தன்மை மீண்டும் பரிசோதிக்கப்படும். அவ்வேளையில் உங்களுக்கு நிறக்குருட்டுத்தன்மை இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், உங்களது பரீட்சைப் பெறுபேறு செல்லுபடியற்றதாக்கப்படும்

3. பரீட்சை விண்ணப்பக் கட்டணம் - அமெரிக்க டொலர் 28க்குச் சமனான ரூபாய் பெறுமதி (ரூ. 9,250.00)

விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தும் போது, உங்களுக்கு அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கி (NSB), இலங்கை வங்கி (BOC) அல்லது மக்கள் வங்கி (People's Bank) ஆகியவற்றின் பின்வரும் கணக்குகளுள் ஏதேனும் ஒரு கணக்கிற்கு மாத்திரம் பணத்தை வைப்புச் செய்தல் வேண்டும்

- 100-800-44-2461 - தேசிய சேமிப்பு வங்கி (பத்தரமுல்லை கிளை)
- 0000001650 - இலங்கை வங்கி (நிறுவனக் கிளை)
- 208100151791068 - மக்கள் வங்கி (பத்தரமுல்லை கிளை)

பரீட்சை அனுமதிப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்காகப் பணம் செலுத்திய பற்றுச்சீட்டைப் பதிவேற்றுவது (Upload) கட்டாயமானது என்பதால், 2026 ஒக்டோபர் 26, 27, 28, 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் கட்டாயம் பணத்தைச் செலுத்துங்கள்

பணம் செலுத்திய பற்றுச்சீட்டை ஸ்கேன் செய்து (File Size: 1MB) வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். Online / ATM ஊடாகக் கட்டணங்களைச் செலுத்தக் கூடாது.

வங்கிப் பற்றுச்சீட்டைப் பூர்த்தி செய்யும் போது, கட்டாயமாக உங்கள் பெயர், முகவரி, கடவுச்சீட்டு இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன், பணம் செலுத்துவதற்கான காரணமாக “EPS-TOPIK -2026 பரீட்சை விண்ணப்பக் கட்டணம்“ எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேலும், உங்களது கடவுச்சீட்டில் உள்ள கையொப்பத்தை அதில் தெளிவாக இட வேண்டும். அவ்வாறில்லாத பற்றுச்சீட்டுகள் நிராகரிக்கப்படும். எத்தகைய தகவல்களையும் குறிப்பிடாமல் பணத்தைச் செலுத்தும் வங்கிப் பற்றுச்சீட்டுகளும் நிராகரிக்கப்படும்.

வங்கிப் பற்றுச்சீட்டைப் பூர்த்தி செய்ய வேண்டிய மாதிரி வடிவம்



BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
BOC/Supp/S 260845

මුදල් තැන්පතු පත්‍රිකාව பண வைப்புச் சீட்டு Cash Deposit Slip

දිනය / திகதி / Date 10 2026

ගිණුම් / කාඩ්පත් අංකය கணக்கு/அட்டை இலக்கம் Account / Card Number 0000001650

ගිණුම්/කාඩ්පත් හිමියාගේ නම සහ ලිපිනය Sri Lanka bureau of Foreign Employment

கணக்கு/அட்டை வைத்திருப்பவரின் பெயரும் முகவரியும் : No. 294, kaswatta , Battaramulla

Account / Card Holder's Name and Address :

ගිණුම් / කාඩ්පත් හිමියා නොමැතිව වෙනත් පාර්ශවයක් විසින් කරන රු. 200,000ට වැඩි මුදල් තැන්පතු සඳහා
கணக்குரிமையாளர் /* அட்டை வைத்திருப்பவர் அல்லாது மற்றவர்களால் மேற்கொள்ளப்படும் ரூ.200,000/-இற்கு அதிகமான வைப்புகளுக்கு
For cash deposits above Rs. 200,000 deposited by Person other than A/C Holder/Card Holder

Credit 1-2

තැන්පත් කරන්නාගේ නම සහ ලිපිනය / வைப்புச் செய்பவரின் பெயரும் முகவரியும் / Depositor's Name and Address
Depositor's Name & Address

ජා.හැ.ප/ ගමන් බලපත් / රියදුරු බලපත් අංකය
தே.அ.அ./கடவுச்சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திர இல. / N.I.C / P.P./ D.L.No.: Passport Number

දුරකථන අංකය / தொலைபேசி இல. / Telephone No : Telephone Number

තැන්පතුවේ අවශ්‍යතාවය / வைப்பின் நோக்கம் / Purpose of Deposit : Eps-Topik-2026 Admission Fee

Ref No.

තැන්පත්කරුගේ අත්සන / வைப்புச்செய்பவரின் ஒப்பம் / Depositor's Signature: Signature

Form No. 70175

පරිගණක මුද්‍රිත හෝ නිල අත්සන් ඇත්නම් වලංගුයි / கணனி அச்சீடு அல்லது அதிகார ஒப்பம் இருப்பின் செல்லுபடியாகும் / Valid Computer Print or Authorised Signature

நோட்டு தாள்கள் Notes	ரூபியல் / ரூபா. / Rs.	சத. சதம். Cts.
5000 /-		
2000 /-		
1000 /-		
500 /-		
200 /-		
100 /-		
50 /-		
20 /-		
10 /-		
நாணயத்தாள்கள் Coins		
மொத்தம் Total	- 9 250 00	

Validation checked

DIGISCAN - BIH 368 731/2

Signature

PEOPLE'S BANK
මහජන බැංකුව | மக்கள் வங்கி

තැන්පතු පත | வைப்புச்சீட்டு | Deposit Slip — office Copy

ගිණුම් අංකය கணக்கு இலக்கம் Account Number 208100151791068

දිනය | திகதி | Date 10 2026

NP/06/26/01

ගිණුම් හිමියාගේ නම කණක්කුරිමையாளரின் பெயர் Name of Account Holder: Sri Lanka Bureau of Foreign Employment

ගිණුම් හිමියා හැර වෙනත් අයෙකු විසින් කරනු ලබන රු. 200,000/- ට වැඩි තැන්පතු සඳහා පමණක් පහත විස්තර සම්පූර්ණ කරන්න.
கணக்குரிமையாளரைத் தவிர மற்றையவர்களால் ரூ.200,000/- க்கு அதிகமாக செய்யப்படும் வைப்புகளுக்காக மாத்திரம் பின்வரும் விபரங்களை பூர்த்தி செய்யவும்.
Give the following information only when a deposit of over Rs. 200,000/- is made by a person other than the Account Holder.

නම பெயர் Name: Name

ලිපිනය முகவரி Address: Address — දුරකථන අංකය தொலைபேசி இல. Tel. No: Tel. NO

ජා.හැ.ප. | විදේශ ගමන් බලපත් | රියදුරු බලපත් අංකය
தே.அ.அ/ கடவுச்சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திர இல. NIC/P.P/D.L.No.: passport Number

අරමුණ காரணம் Purpose: Eps-Topik-2026 Admission Fee

මුදල් තැන්පත්කරුගේ අත්සන பண வைப்பாளரின் கையொப்பம் Cash Depositor's Signature: Depositor's Signature

Form No213 DP

x 5000	
x 2000	
x 1000	
x 500	
x 200	
x 100	
x 50	
x 20	
x 10	
කාසි நாணயங்கள் Coins	
එකතුව	மொத்தம் Total: - 9250 00

යන්තු මුද්‍රිත හෝ නිල අත්සන ඇත්නම් වලංගුයි | இயந்திர பதிவு அல்லது உத்தியோகபூர்வ கையொப்பத்துடன் செல்லுபடியாகும் | Valid if Overprinted or Signed by an officer

මේම ඉරට පහලින් කිසිවක් ලොකියන්න | இக் கோட்டுக்குக் கீழே எதுவும் எழுத வேண்டாம் | Do Not Write Anything Below This Line

Checked by

NSB
ජාතික ඉතිරිකිරීම් බැංකුව
தேசிய சேமிப்பு வங்கி
National Savings Bank

මුදල් තැන්පතු පත්‍රිකාව/பண வைப்புச் சீட்டு/Cash Deposit Slip

දිනය/திகதி/Date 10 2026

ගිණුම් හිමියාගේ/කාඩ්පත් හිමියාගේ නම/නම්/கணக்குரிமையாளர்/களின்/அட்டையுரிமையாளர்/களின் பெயர்/கள்/
Name/s of the Account Holder/s/Card Holder/s
Sri Lanka Bureau of Foreign Employment

ඉතුරුම්/ස්ථාවර තැන්පතු சேமிப்பு/நிலையான வைப்பு Savings/ FD ☐ | ණය කාඩ්පත් ගෙවීම් கடன் அட்டை கட்டணம் Credit Card Payment ☐ | උපයෝගිතා බිල්පත් பாவனைக் கட்டண பட்டியல் Utility Bill Payment ☐ | උකස් அடகு Pawning ☐ | ණය கடன் Loan ☐ | වෙනත් ஏனைய Other ☐

බැංකුවේ නම (ණය කාඩ්පත් සඳහා පමණි) வங்கியின் பெயர்(கடன் அட்டைகளுக்கு மாத்திரம்) Name of the Bank (For Credit Cards Only)

උපයෝගිතා බිල්පත් වර්ගය பயனாட்டு கட்டணப் பட்டியல் வகை Utility Bill Type

මුදල අකුරින්/தொகை எழுத்தில்/Amount in Words
රු. ரூபா. Rs. Nine Thousand Two Hundred and Fifty Rupees only

මුදල ඉලක්කමෙන්/தொகை இலக்கத்தில் /Amount in Figures
රු. ரூபா. Rs. 9250.00

ගිණුම් හිමියා/කාඩ්පත් හිමියා හැර වෙනත් අයෙකු විසින් කරනු ලබන රු. 200,000/- ට වැඩි මුදල් තැන්පතු සඳහා පමණක් සම්පූර්ණ කරන්න.
கணக்குரிமையாளர்/ அட்டையுரிமையாளர் அல்லாதவரால் மேற்கொள்ளப்படுகின்ற ரூபா.200,000/-ற்கு மேற்பட்ட வைப்புகளுக்கு மாத்திரம்
Fill this section if the cash deposit is above LKR 200,000/- and deposited by a person other than the account holder/card holder.

නම/பெயர்/Name: Name

ලිපිනය/முகவரி/Address: Address

ජා.හැ.ප./වී.ග.බ/රියදුරු බලපත් අංකය தே.அ.அ/செல்லுபடியாகின்ற கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திர இல/
NIC/P.P./D.L. No.: passport Number

මුදලේ මූලාශ්‍රය හෝ තැන්පතුවේ අරමුණ/வைப்பின் ஆதாரம் அல்லது நோக்கம்
Source of Funds or Purpose of the Deposit: Eps-Topik-2026 Admission Fee

දුරකථන අංකය/தொ.பே.இல/Tel. No — යොමු අංකය/தொடர்பு இல/REF No.

කාර්යාලීය ප්‍රයෝජනය සඳහා පමණි./அலுவலக பாவனைக்காக மாத்திரமே./For office use only.

ගිණුම් අංකය/යොමු අංකය/கணக்கு இல./தொடர்பு இல./Account No. / Reference No.
100-800-44-2461

நோட்டு தாள்கள் Notes	எடுப்பளவி பெறுமதி Value	ரூ. ரூபா. Rs.	சத. சதம். Cts.
x 5000			
x 2000			
x 1000			
x 500			
x 100			
x 50			
x 20			
x 10			
කාසි நாணயங்கள் Coins			
එකතුව மொத்தம் Total		- 9250 00	

Depositor's Signature

මුදල් තැන්පතුකරුගේ අත්සන
பண வைப்பாளரின் கையொப்பம்
Depositor's Signature

பரீட்சை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள் :-

படிமுறை 1:-

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இணையத்தளத்திற்குச் சென்று (www.slbfe.lk), 'Registration for Point System Examination -2026 (Manufacturing> Fishery)" என்பதற்குச் சென்று உங்களது தகவல்களை உள்ளிட வேண்டும்.

அதற்காகப் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களுக்கும் தொடர்புடைய அனைத்து இணக்கப்பாடுகளையும் Click செய்யவும். (பரீட்சை விண்ணப்பமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக இதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் கருமங்கள் / இணக்கப்பாடுகளுக்கும் Click செய்வது கட்டாயமானது ஆகும்.).



அனைத்துக் கருத்துக்களையும் / இணக்கப்பாடுகளையும் Click செய்த பின்னர், முன்னோக்கிச் செல்லுக / Next பட்டனை Click செய்யவும்.

படிமுறை 2:-

முன்னோக்கிச் சென்ற பின், பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடவும்.



அதன் பின்னர் முன்னோக்கிச் செல்லுக / Next பட்டனை Click செய்யவும்

படிமுறை 3:- பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு,

* உங்களது தேசிய அடையாள அட்டையின் முன் மற்றும் பின் பக்கங்களின் புகைப்படங்களை உள்ளிடவும்.

* Personal Details இன் கீழ்

I. கடவுச்சீட்டில் Barcode இல் குறிப்பிட்டுள்ளவாறு பெயர்
II. கடவுச்சீட்டு இலக்கம்
III. பாலினம்
IV. பிறந்த திகதி (1986.10.27 இலிருந்து 2008.10.26 ஆந் திகதிக்குள் பிறந்தவராயிருத்தல்)
V. கையடக்க தொலைபேசி இலக்கம் (இதனை மாற்ற முடியாது)
V1. முகவரி
VII. மின்னஞ்சல் முகவரி
VIII. நெருங்கிய உறவினர் ஒருவரின் தொலைபேசி இலக்கம்
IX. பிரதேசம்
X. அருகிலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நிலையம்.

ஆகிய தகவல்களை உள்ளிடவும்.



உதாரணமாக, கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு உங்கள் பெயரை உள்ளிடும்போது ஆங்கிலப் பெரிய எழுத்துக்களைப் (Capital letters) பயன்படுத்தி, கடவுச்சீட்டில் (Passport) உள்ள Barcode/MRZ-இல் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி உள்ளிட வேண்டும்.

கவனத்திற்கு-

* உங்கள் பெயரை உள்ளிடும் போது, ஒவ்வொரு பெயரின் முடிவிலும் ஒரே ஒரு இடைவெளி (Space) மாத்திரம் விட்டுப் பெயரைக் குறிப்பிட வேண்டும். மேலும், Barcode/MRZ இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறே, ஒரு எழுத்துக்கூட மாறாமல் சரியாக உள்ளிடுவது கட்டாயமாகும். (இவ்வாறு இல்லாத விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படுவதில் ஏற்படும் தாமதங்களுக்குப் பொறுப்புக் கூறப்பட மாட்டாது.)



மேற்கண்ட தகவல்களை முழுமையாக உள்ளீடு செய்ததன் பின்னர் Next பட்டனை (Click) அழுத்தி முன்னோக்கிச் செல்லவும்.

படிமுறை 4:- இதன் பின்னர் உங்களால் பின்வரும் தகவல்களை உள்ளிட முடியும்.

உங்கள் புகைப்படம் மற்றும் கடவுச்சீட்டின் புகைப்படம் உள்ள பக்கத்தின் தெளிவான ஸ்கேன் நகல் ஒன்றை (Upload) பதிவேற்றவும்.

கவனிக்கவும் :- உங்களது கடவுச்சீட்டு நகலை ஸ்கேன் செய்யும்போது Barcode/MRZ பகுதி வெட்டுப்படாமல் முழுமையாக ஸ்கேன் செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யாத சந்தர்ப்பங்களில் உங்களது பரீட்சை விண்ணப்பம் அனுமதிக்கப்பட மாட்டாது.





இந்த வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரரின் புகைப்படம், கடவுச்சீட்டின் புகைப்படப்பக்கத்தின் தெளிவான ஸ்கேன் பிரதியை பதிவேற்றம் (Upload) செய்யவும்.

மேலும், கடவுச்சீட்டு வழங்கப்பட்ட திகதி, கடவுச்சீட்டு காலாவதியாகும் மற்றும் தொடர்புடைய தொழில் பிரிவு ஆகியவற்றை உள்ளிடவும்.

உங்கள் கடவுச்சீட்டு வழங்கப்பட்ட திகதி மற்றும் காலாவதியாகும் திகதி ஆகியவற்றை (வருடம;/மாதம்/திகதி) என்றவாறு உள்ளிடவும்.

தொடர்ந்து செல்ல / Next பட்டனை (Click) கிளிக் செய்யவும்.

படிமுறை 5 :-

கீழே குறிப்பிடப்பட்டுள்ள உருவப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, பூர்த்தி செய்யப்பட்ட அனைத்துத் தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதையும், கொரியா மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் (HRD Korea) அறிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு இணங்குவதாகவும் தெரிவித்து, விண்ணப்பங்களைப் பெறுவதற்காக நீங்கள் கட்டணம் செலுத்திய திகதி, அதற்கான கட்டணம் செலுத்தப்பட்ட வங்கி ஆகியவற்றைக் குறிப்பிட்டு, உங்களது கைத் தொலைபேசிக்கு (Mobile Phone) பெறப்பட்ட சரிபார்ப்புக் குறியீட்டை (OTP / Verification Code) உரிய முறையில் உள்ளிடவும்.

அதன் பின்னர் "Apply" பட்டனை (Button) கிளிக் செய்வதன் மூலம் உங்களது விண்ணப்பத்தை எமக்கு அனுப்பி வைக்கவும்.



விண்ணப்பத்தைச் பரிசீலனை செய்த பின்னர், உங்களது விண்ணப்பம் எமக்குக் கிடைத்துள்ளமை தொடர்பாக குறுஞ்செய்தி (SMS) மூலம் உங்களுக்கு அறிவிக்கப்படும். விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்ததன் பின்னர், உங்களது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையாக இருப்பின், குறுஞ்செய்தி மூலம் உமக்குரிய பரீட்சை எண் அறிவிக்கப்படும்.

அதற்கமைய, உமக்குக் கிடைக்கும் பரீட்சை எண்ணைப் பயன்படுத்தி, பணியகம் அறிவித்ததன் பின்னர் விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.



நீங்கள் உள்ளிட்ட தகவல்களில் ஏதேனும் பிழைகள் இருப்பின், அந்த விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட மாட்டாது. அவ்வாறு அங்கீகரிக்கப்படாததற்கான காரணத்தைக் குறிப்பிட்டு, அதனைத் திருத்திக் கொள்ளுமாறு எம்மால் உங்களுக்கு ஒரு குறுஞ்செய்தி (SMS) அனுப்பப்படும். அந்த குறுஞ்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்களை மேற்கொண்டு விண்ணப்பத்தை மீண்டும் சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் மேலே உள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பரீட்சைக்காகப் பதிவு செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

இணைப்பு 01

தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்தல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பான ஒப்புதலைப் பெறுதல்

நோக்கம்	வேலைவாய்ப்பு அனுமதி முறைமைக்கு (EPS) இணங்க விண்ணப்பதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் வேலை தேடுவோர் பட்டியலில் பதிவு செய்தல் போன்றவற்றுக்காகத் தனிப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன
பெறப்படும் தகவல்கள்	புகைப்படம், பெயர், பிறந்த திகதி, பாலினம், கடவுச்சீட்டு எண், தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட தொடர்புத் தகவல்கள் மற்றும் விண்ணப்ப எண்.
தகவல் பாதுகாத்து வைக்கப்படும் காலம்	EPS-TOPIK மற்றும் அதனுடன் தொடர்புடைய நிர்வாகச் செயல்முறைகள் (அரை நிரந்தரமாக) முடியும் வரை.
விண்ணப்பதாரர்களின் உரிமைகள்	தனிப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் ஒப்புதல் அளிப்பதை மறுக்க உங்களுக்கு உரிமை உண்டு. எவ்வாறயலினும், அவ்வாறு மறுப்பது சம்பந்தப்பந்தமாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது சில வரம்புகளை அல்லது பாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தக்கூடும்.

மூன்றாம் தரப்புக்குத் தனிப்பட்ட தகவல்களை வழங்குதல்.

வேலைவாய்ப்பு அனுமதி முறைமைக்கு இணங்க, கொரிய மொழிப் பரீட்சைக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் என்பது, வெளிநாட்டு ஊழியர்களின் வேலைவாய்ப்புச் சட்டத்தின் 07 ஆவது பிரிவின் மற்றும் நடைமுறைப்படுத்தல் கட்டளையின் 13 மற்றும் 31-2 பிரிவுகளின் அடிப்படையில் பரீட்சையைப் பராமரிப்பதற்கும், வேலை தேடுவோரின் தரவுகளைப் பதிவு செய்வதற்கும் தேவையான தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்து, பின்வரும் நிறுவனங்களால் செயலாக்கிப் பயன்படுத்தப்படலாம் என்பதாகும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஒப்புதல் அளிப்பதை மறுக்க உங்களுக்கு உரிமை உண்டு. எவ்வாறாயினும், நீங்கள் உடன்படாவிட்டால், உங்களால் EPS-TOPIK விண்ணப்பிக்க முடியாது.

நிறுவனம்	வழங்கப்பட்ட தகவல்கள்	தகவல் பாதுகாத்து வைக்கப்படும் காலம்	நோக்கம்
கொரிய வேலைவாய்ப்பு தகவல் சேவை	புகைப்படம், பெயர், பிறந்த திகதி, பாலினம், கடவுச்சீட்டு எண், தொலைபேசி இலக்கம், விண்ணப்ப இல	அரைக்கால / நிரந்தர	விண்ணப்பதாரர்களின் பட்டியலைப் பதிவு செய்தல் மற்றும் வேலைவாய்ப்பு அனுமதி முறைமைகள் மற்றும் தொழிலாளர் ஒப்பந்த நடைமுறைகள் போன்ற நிர்வாகப் பணிகளைக் கையாளுதல்
அந்த நாட்டுத் தூதரகம் (தென் கொரியா) மற்றும் நம் நாட்டில் உள்ள கொரியத் தூதரகம் (இலங்கை)			உரிய நாட்டின் பிரகாரம் அனுப்புதல் மற்றும் அறிமுகப்படுத்தும் நிலைமையை மேற்பார்வை செய்தல் மற்றும் சட்டவிரோதமாகத் தங்கியிருத்தல் போன்றவற்றுக்காக உரிய நிர்வாக நடவடிக்கைகளை எடுத்தல்
குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்			CCVI வழங்குவதற்காக விண்ணப்பித்தல் போன்ற பணிகளைச் செயலாக்குதல்.

துல்லியமான அடையாளத்தைக் கண்டறிவதற்கான தகவல்களைத் தயாரித்தல்

தொடர்புடைய தகவல்கள்	தகவல் பாதுகாத்து வைக்கப்படும் காலம்	நோக்கம்	விண்ணப்பதாரர்களின் உரிமைகள்
கடவுச்சீட்டு எண்	அரைக்கால / இடைக்கால	EPS-TOPIK பரீட்சையை நடாத்துதல் மற்றும் தொடர்புடைய விதிகளுக்கு இணங்க விண்ணப்பதாரர்களின் பட்டியலைத் தயாரிப்பதற்காக உரிய அடையாளத் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் செயலாக்குதல	அடையாளத்தைக் கண்டறியும் தகவல்களை வழங்க மறுக்க விண்ணப்பதாரருக்கு உரிமை உண்டு. எவ்வாறாயினும், உரிய தகவல்களை வழங்கத் தவறும் பட்சத்தில், பரீட்சைக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்

தனிப்பட்ட தகவல்களைக் கையாளுதல் தொடர்பான வழிகாட்டல்

EPS-TOPIK விண்ணப்பங்களைச் திறம்பட நிர்வகிப்பதற்காக, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சினால் தனிப்பட்ட தகவல்கள் அடிப்படையிலான சேவைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும் (MOU) சேவை இணைப்புக் ஒப்பந்தமும் தயாரிக்கப்படும்.

நிறுவனம்	வழங்கப்பட்ட தகவல்கள	தகவல் பாதுகாத்து வைக்கப்படும் காலம்	நோக்கம
EPS பரிந்துரை முகவர்	புகைப்படம், பெயர், பிறந்த திகதி, பாலினம், கடவுச்சீட்டு இல, தொலைபேசி இலக்கம், விண்ணப்ப இல	குறிப்பிட்ட EPS-TOPIK பரிட்சைக்கான விண்ணப்பங்களை வழங்கும் காலம் வரை	EPS-TOPIK விண்ணப்பத்திற்காக உரிய அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் தொடர்புடைய பணிகள்